செய்தி வெளியீடு **நாள் : 23.1.2025**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எப்படி தேர்தல் அறிக்கையில் கூறியிருந்த 505 தேர்தல் அறிக்கையில் சுமார் 385 வாக்குறுதிகளை நிறைவேற்றி சொன்னதை செய்கின்ற அரசாக இந்த அரசு இருக்கின்றது.

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்

•••••••••

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (23.1.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி, எண்ணூரில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடம் மற்றும் நவீன சந்தையையும், ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியில் கட்டப்பட்டு வரும் தண்டையார்பேட்டை பேருந்து நிலையத்தையும், இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் கட்டப்பட்டு வரும் மூலக்கொத்தளம் சமுதாய நலக்கூடத்தையும் மற்றும் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் கட்டப்பட்டு வரும் கொண்டித்தோப்பு இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் 700 புதிய குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலே அமைந்திருக்கின்ற இந்த அரசு வடசென்னை வளர்ச்சி திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் தந்து கடந்த 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் தேதி தங்கசாலையில் ரூபாய் 4,500 கோடியில் பல்வேறு திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் ரூபாய் 6,350 கோடி செலவில் 252 பணிகள் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** கடந்த 2024 நவம்பர் மாதம் 4ஆம் தேதி வால்டாக்ஸ் சாலையில் பல்வேறு பணிகளை துவக்கி வைத்தார்கள். துவக்கப்பட்ட பிறகு வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் எடுத்துக் கொண்ட பணிகளை வாரத்திற்கு மூன்று நாட்கள் களஆய்வினை மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் இந்த வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் கட்டப்பட இருக்கின்ற 700 குடியிருப்புகளினுடைய பணிகளின் முன்னேற்றத்தை ஊடகத்தின் சார்ந்த நீங்களே பார்த்திருப்பீர்கள். புயல் வேகத்தில் இல்லை ஜெட் வேகத்தில் இந்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த பணி முடிவுற்று பயனாளிகளுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக பயனாளிகள் பயன்படுத்துகின்ற வகையில் இந்தப் பணிகள் அமையும்.

Verified RealEstate™

இன்று காலை முதல் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்ட பணிகளான திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி, எண்ணூரில் 58 சிறு வணிகம் செய்வதற்குண்டான கடைகளும், 300 பேர் அமரக்கூடிய ஒரு சமுதாய கூட பணிகளும் பார்வையிட்டு வந்தோம். அதை தொடர்ந்து ஆர் கே நகர் தொகுதியில் அமையவிருக்கின்ற தண்டையார்பேட்டை பேருந்து நிலையத்தை அனைத்து வசதிகளுடன் அலுவலகக் கட்டிடம், வணிக கட்டிடம், அதேபோல் பேருந்துகள் நிறுத்துகின்ற பஸ்பே என்று சொல்லப்படுகின்ற கட்டடங்கள் என ஒரு மிகப்பெரிய பேருந்து நிலையத்தை அமைக்கின்ற பணியையும் பார்வையிட்டு வந்திருக்கின்றோம். அதைத்தொடர்ந்து இராயபுரம் பகுதியிலே அமைய இருக்கின்ற திருமண மண்டபத்தையும், அதைத்தொடர்ந்து துறைமுகத்தில் அமையவிருக்கின்ற டயாலிசிஸ் சென்டர் பணிகளின் முன்னேற்றத்தை குறித்து ஆய்வு செய்து இருக்கின்றோம். இப்பொழுது ஐந்தாவது இடமாக வால்டாக்ஸ் சாலையில் 700 பயனாளிகளுக்கு பயன்படக்கூடிய குடியிருப்புகள் கட்டுகின்ற பணியை தற்போது பார்வையிட்டு இருக்கின்றோம்.

வடசென்னை வளர்ச்சி திட்டத்தை பொறுத்த அளவில் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எப்படி தேர்தல் அறிக்கையில் கூறியிருந்த 505 தேர்தல் அறிக்கையில் சுமார் 385 வாக்குறுதிகளை நிறைவேற்றி சொன்னதை செய்கின்ற அரசாக இந்த அரசு இருக்கின்றது.** அதேபோல் வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் எடுத்துக்கொண்ட திட்டப் பணிகளை விரைவாக முடிக்கின்ற நோக்கத்தில் எங்கள் துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய திருமதி. காகர்லா உஷா அவர்களும், துறையினுடைய உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய திரு.அன்சுல் மிஸ்ரா அவர்களும், துறையினுடைய முதன்மை செயல் அலுவலர் அன்பிற்கினிய திரு.சிவஞானம் அவர்களும், அதேபோல் பெருநகரத்தின் உடைய மேயர் திருமதி.பிரியா ராஜன் அவர்களும், அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தந்த தொகுதிக்குட்பட்ட மண்டலக் குழுத் தலைவர்கள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், சென்னை பெருநகரத்தின் உடைய மாநகராட்சி அதிகாரிகள் ஒருங்கிணைந்து இந்த பணிகளை துரிதப்படுத்தி வருகின்றோம். **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய** கனவு திட்டமான வடசென்னை வளர்ச்சி திட்டம் நாளொரு மேனி வளர்ச்சியை நோக்கி வளர்ந்து வருகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வுகளின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.சுதர்சனம் அவர்கள், திரு.கே.பி.சங்கர் அவர்கள், திரு.ஜே.ஜே.எபிநேசர் அவர்கள், திரு.ஐட்ரீம்ஸ் மூர்த்தி அவர்கள், மாநகராட்சி நகரமைப்பு குழுத்தலைவர் திரு.இளைய அருணா, மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.தனியரசு, திரு.நேதாஜி யூ. கணேசன், திரு.பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.கோமதி சந்தோஷ், திருமதி.குமாரி நாகராஜ், திரு.ராஜேஷ் ஜெயின், தலைமை திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.மா.பாலமுருகன், மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு, மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate™